# தமிழர் விடுதலைக் கூட்டணி
## දෙමළ එක්සත් විමුක්ති පෙරමුණ
## TAMIL UNITED LIBERATION FRONT

Telephone: (9411) 2347721
Fax: (9411) 2384904

30/1B, Alwis Place,
Colombo-03. Sri Lanka.


**பத்திரிகை அறிக்கை** 08-11-2006

இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்களின் தலைமையில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் த. சித்தார்த்தன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி – பத்மநாபா அமைப்பின் பொதுச்செயலாளர் தி. ஸ்ரீதரன் ஆகியோர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களை அவரின் அலுவலகத்தில் சந்தித்து தற்போது தமிழ் மக்கள் எதிர்நோக்கும் மனிதாபிமானப் பிரச்சினைகள், வடக்கு - கிழக்கு இணைப்பு ஆகிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் பற்றி கலந்துரையாடினோம்.

யாழ்ப்பாணம், வாகரை ஆகிய பிரதேசங்களில் மக்கள் எதிர்நோக்கும் அத்தியாவசிய உணவு, மருந்து, எரிபொருள் பற்றாக்குறை, மாணவர்களின் கல்வி மற்றும் போக்குவரத்து நெருக்கடிகள் தொடர்பாக விரிவாக எடுத்துரைத்தோம்.

புலிகள் ஏ-9 வீதியில் ஆட்கடத்தல், வரி வசூல், போன்றவற்றில் ஈடுபடாத வகையில் நிபந்தனைகளை முன்வைத்து சர்வதேச நிறுவனங்களின் கண்காணிப்புடன் பொருட்கள் யாழ் குடாநாட்டை சென்றடைய ஏற்புடையதான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினோம். தவிர இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்திலும், கிழக்கிலும் பற்றாக்குறையால் அவதியுறும் மக்களுக்கு அத்தியாவசிய உணவு, மருந்துப் பொருட்களை நேரடியாக பெற்று வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டோம்.

வடக்கு - கிழக்கு இணைப்பு ஒரு அரசியல் விடயம் என்பதையும், தற்போது அதிகாரப்பகிர்வு விடயம் முன்னிறுத்தப்பட வேண்டும் என்பதையும் இணைந்த வடக்கு - கிழக்கு என்ற நிலை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டினோம்.

தற்போதைய சூழ்நிலையில் வாகரை மற்றும் யாழ் பகுதிகளில் நிலவும் நெருக்கடியான சூழ்நிலையில் எதிர்வரும் டிசம்பரில் நடைபெறவுள்ள க.பொ.த (சா.த) பரீட்சை அங்கு ஒத்தி வைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டோம்.

யாழ்ப்பாணத்தில் மூன்று, நான்கு மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை சேமித்து வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும், வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்பான விடயத்தில் நாங்கள் கூறுவதை புரிந்து கொள்வதாகவும, வடக்கு கிழக்கில் க.பொ.த (சா.த) பரீட்சையை ஒத்தி வைப்பதற்குரிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

**வீ. ஆனந்தசங்கரி**
**தலைவர் – த.வி.கூ**

**த. சித்தார்த்தன் - தமிழீழ மக்கள் விடுதலை கழகம்**
**தி. ஸ்ரீதரன் - ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி - பத்மநாபா**